# மதுக்கூர் காவலின் அவலம்...

## முதல்வர் – டி.ஜி.பி. – எஸ்.பி. பார்வைக்கு!

தடைசெய்யப்பட்ட லாட்டரி விற்பனை, கலப்பட மது விற்பனை, டாஸ்மாக் – பார்களில் பெறும் மாத 'மாமுல்கள்' என சட்டவிரோத செயல்களுக்கு எல்லாம் ஒப்பந்ததாரராக இருக்கும் மதுக்கூர் காவல் SBHC செந்தில் குமாரின் நடவடிக்கைகளை நாம் ஒரு பக்கம் தோலுரித்து வந்தாலும், உயர் காவல் அதிகாரிகளின் உரிய நடவடிக்கைகள் எல்லாம் 'மந்தம்' என்ற நிலையிலே இருந்து வருகிறது.

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், மதுக்கூர் ஒன்றியம், வாட்டாகுடி வடக்கு பகுதியை சொந்த ஊராக கொண்டு வசிக்கும் மகேந்திரன் என்பவர், தடை செய்யபபட்ட ஒரு நம்பர் லாட்டரி விற்பனையில், வாட்டாகுடி மற்றும் அதனை சுற்றியுள்ள கிராமங்களுக்கு சென்றும் கனஜோராராக 'கல்லா' கட்டி வருகிறார். அது மட்டுமல்ல இவர் செய்கிற செயல்கள் எல்லாமே சட்டவிரோத செயல்கள் என்றும், இதனை அப்பட்டமாக மதுக்கூர் காவல் நிலைய எல்லைக்குள் இருக்கும் காவல் அதிகாரிகள் அனைவரும் அறிந்தாலும், இந்த மகேந்திரன் த/பெ – தீபாவளிதேவர் என்ற பிரகலாதன் மீது, இதுவரை மதுக்கூர் காவல் நிலையத்தினரால் ஒரு வழக்குகள் கூட பதியப் படவில்லை.

அதே நேரத்தில் இந்த மாவட்டத்திற்கு பக்கத்து மாவட்டமான திருவாரூர் மாவட்டத்தில் இதே மகேந்திரனால் அரங்கேற்றபட்ட சட்டவிரோத செயல்களுக்கு, முற்றுபுள்ளிவைக்கும் விதமாக, திருவாரூர் மாவட்ட காவல்துறையினரால் மகேந்திரன் மீது வழக்கு பதிந்து (பார்க்க – நாளிதழ் செய்தி), அவரது வாகனத்தையும், அவரது கைபேசி மற்றும் அவரிடம் உள்ள சட்டவிரோத தொழில் களுக்கு உண்டான ஆவணங்களையும், அதற்குரிய கரன்சிகளையும் கைப்பற்றி வழக்கு பதியும் திருவாரூர் போலிசார்களுக்கு மத்தியில்...



...ஈடுபட்ட உததரவ
டப்பட்டுள்ளது என்றார்.
திய மண்டல ஐஜி பால சிலைகளுக்கும் பலத்த

திருவாரூர் அருகே வாகன சோதனை

### ஆன்லைன் லாட்டரி விற்பனையாளர் கைது

**பணம், செல்போன் பறிமுதல்**

மன்னார்குடி, ஜன.26: திருவாரூர் அருகே வாகன சோதனையின்போது ஆன்லைன் லாட்டரி விற்பனையாளரை போலீசார் கைது செய்தனர்.

திருவாரூர் மாவட்டம் பெருகவாழ்ந்தான் கடை வீதியில் எஸ்எஸ்ஐ. சங்கர் தலைமையில் தனிப்படை போலீசார் நேற்று மதியம் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டனர். அப்போது அவ்வழியே வந்த பைக்கை சந்தேகத்தின் பேரில் மடக்கி விசாரித்ததில், பைக்கில் வந்த நபர் முன்னுக்கு பின் முரணாக பேசியதால் சந்தேகமடைந்த போலீசார் அவரை பெருகவாழ்ந்தான் காவல் நிலையத்திற்கு கொண்டு சென்றனர். அங்கு அவரிடம் போலீசார் கிடுக்கிப்பிடி விசாரணை மேற்கொண்டனர்.

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை அடுத்த வாட்டாக்குடி வடக்கு கிராமத்தை சேர்ந்த மகேந்திரன்(42) என்ப...தும், இவர் பல்வேறு வாட்ஸ் அப் குழு...களை உருவாக்கி அதன் மூலம் அரசா... தடை செய்யப்பட்ட லாட்டரி விற்பனை...யில் ஈடுபட்டு வந்தது தெரிய வந்தது. இதுகுறித்து போலீசார் வழக்குப்பதி...செய்து மகேந்திரனை கை...செய்து அவரிடமிருந்...ரூ.31,740 ரொக்க பண...செல்போன் மற்றும் ...பறிமுதல் செய்தனர்.

▶ மகேந்திரன்

திருவாரூர் மாவட்ட காவலின் நடவடிக்கை....
மகேந்திரன் கைது பற்றிய வந்த நாளிதழ் செய்தி





தஞ்சாவூர் மாவட்ட மதுக்கூர் காவல் அதிகாரிகளால் மட்டும் மகேந்திரன் மீது ஏன் வழக்குபதிய முடியவில்லை என்பதை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் கூர்ந்து கவனிக்குமா என கேள்வி எழுப்புகின்றனர் வாட்டாகுடி கிராமத்தினர்.

திமுக கோட்டை என கூறப்படும் தஞ்சாவூர் மாவட்டம் பல ஆயிரம் கிராமங்களை உள்ளடக்கிய மாவட்டமாகும். பக்கத்து மாவட்டமான திருவாரூர் மாவட்டம்தான் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் சொந்த மாவட்டமாகும் அப்படியுள்ள திருவாரூர் மாவட்ட மக்களே மூக்கில் விரல் வைத்து ஆச்சர்யபடும் அளவுக்கு, தஞ்சை மாவட்டத்தில் உள்ள கிராம மக்களும், அங்குள்ள இளைஞர்களும், ஊர் பெரியவர்களும் கூட தங்கள் குழந்தைகளுக்கும், தொழில்நிறுவனத்திற்கும், கலைஞரின் குடும்பத்தில் உள்ளவர்களின் பெயரை சூட்டி மகிழ்வோர்கள் என்பதே அனைவரையும் வியக்கவைக்கும் அதிசயங்களில் ஒன்றாகும்.



இந்த சூழ்நிலையில் தஞ்சையை சுற்றியுள்ள கிராமங்களில் முழுக்க, இளைஞர்களின் நேர்வழிக்கான பாதைகளை திசை திருப்பும் வகையிலும், சட்டவிரோத செயல்களை மேலாங்க செய்து, ஆங்காங்கே முளைத்து வரும் மகேந்திரனைகளை உருவாக்கி வருகிறது சில காவல் நிலையங்கள்.

எனவே சமூக விரோத செயல்களை செய்துவரும் நபர்களோடு கைகோர்க்கும் காவல்துறையினரை களையெடுக்க வேண்டும் என வாட்டாகுடி கிராமத்தை சேர்ந்தவர்களே, தங்களது முழு முகவரியுடன், SBHC காவலர் செந்தில்குமார் மீதும், லாட்டரி மற்றும் மது விற்பனையாளரான மகேந்திரன் மீதும் புகார் கொடுத்தும், உரிய நடவடிக்கைகள் மட்டும் ஊர்ந்து செல்கிறது என்கின்றனர். ஆகவே தஞ்சாவூர் மாவட்ட காவலின் நிலைகளை மாண்புமிகு முதல்வர்தான், தனது நேரடிப் பார்வைகளை வீச வேண்டும் என கோரிக்கை வைக்கின்றனர் டெல்டா பகுதியினர்.

நாடு முன்னேற கிராமத்தின் வளர்ச்சி தான் முக்கிய பங்கு என்பதை நாம் சொல்லி யாரும் தெரிய வேண்டியதில்லை.

என்னதான் நடக்கும் என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

30.04.2022

**நெல்லை கோபால்**

மூத்த பத்திரிகையாளர்

சாம்டவர், 1/771, முனுசாமி சாலை, கே.கே. நகர், சென்னை 600 078. செல்: 99944 78389